அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) கோவை-18

தமிழ்த்துறை

முதுகலை இரண்டாமாண்டு தமிழ்

தாள் - 1 காப்பியங்கள்

பாடக்குறியீட்டு எண் - 18MTA31C

ஆசிரியர் - முனைவர். அ. புனிதா
தமிழ்த்துறை

Scanned by CamScanner

உ

# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) கோவை-18

## தமிழ்த்துறை

## முதுகலை இரண்டாமாண்டு தமிழ் - பாடதிட்டம்

## காப்பியங்கள் (18MTA31C)

### அலகு - 1

1. சிலப்பதிகாரம் - புகார்காண்டம் முழுவதும்
2. மணிமேகலை - பாத்திரமரபு கூறிய காதை

### அலகு - 2

1. சீவகசிந்தாமணி - காந்தருவதத்தை இலம்பகம்
2. பெருங்கதை - உஞ்சைக்காண்டம்

### அலகு - 3

1. இராவணகாவியம் - ஆரியப்படலம்
2. கம்பராமாயணம் - நிந்தனைப்படலம்

### அலகு - 4

1. பெரியபுராணம் - குங்கிலியக் கலய நாயனார் புராணம்
2. வில்லிபாரதம் - படையெழுச்சிச் சருக்கம்
   முகூர்த்த கேள்விச் சருக்கம்
   களப்பலியூட்டு சருக்கம்

### அலகு - 5

1. சீறாப்புராணம் - கதீஜா கனவு கண்ட படலம்
2. இரட்சணியயாத்திரிகம் - காட்சிப்படலம்.

— x —

# அலகு-1 சிலப்பதிகாரம் - புகார்காண்டம்

## சிலப்பதிகாரம் :-

- ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று
- காலம் - கி.பி. 2-ம் நூற்றாண்டு
- ஆசிரியர் - இளங்கோவடிகள்
- சேரன் செங்குட்டுவனின் தம்பி இவர்
- காப்பியங்களுக்கான இலக்கண அமைப்புடையது.
- காவிரி, வைகை ஆற்றின் சிறப்புகளும், புகார், உறந்தை, மதுரை, வஞ்சி நகரங்களின் சிறப்புகளையும் எடுத்துரைக்கிறது.
- உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.
- இறையனார், இளம்பூரணர் போன்றோரால் எடுத்தாளப்பட்டது.
- இசைப்பாட்டுக்களும், கூத்து, நடனம் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளது.
- மூன்று காண்டங்கள் கொண்டது. அவை, புகார், மதுரை, வஞ்சிக் காண்டம் என்பதாகும்.
- புகார் காண்டம் பத்து காதைகளை உடையது. அவை,

1. மங்கல வாழ்த்துப் பாடல்
2. மனையறம் படுத்த காதை
3. அரங்கேற்று காதை
4. அந்திமாலை சிறப்பு செய் காதை
5. இந்திரவிழவு ஊர் எடுத்த காதை
6. கடல் ஆடு காதை
7. கானல்வரி
8. வேனிற்காதை
9. கனாத்திறம் உரைத்த காதை
10. நாடுகாண் காதை

Scanned by CamScanner

1. மங்கல வாழ்த்துப் பாடல் :-

காவிரிப்பூம்பட்டினத்தின் பெருங்குடி வணிக மரபில் தோன்றியவர்கள் கோவலன் தந்தை மாசாத்துவானும், கண்ணகியின் தந்தை மாநாய்கனும். இவர்கள் இருவரும் தன் மகன், மகளுக்குத் திருமணம் செய்வித்த சிறப்பு இக்காதையில் கூறப்பட்டுள்ளது. திருமணம் வயது முதிர்ந்த அந்தணன் மறைவழி காட்ட நடைபெறுகிறது. 12 வயது கண்ணகிக்கும், 16 வயது கோவலனுக்கும் திருமணமாகிறது. மணமக்களை மாதர்கள் பலர் சூழ்ந்து வாழ்த்துகின்றனர். 'காதலனைப் பிரியாது கவவுக்கை ஞெகிழாது தீதறுக' என வாழ்த்துகின்றனர். முடிவில் நம் மன்னன் செம்மையையும் வாழ்த்துகின்றனர்.

2. மனையறம் படுத்த காதை :-

திருமணத்திற்குப் பிறகு கோவலன் - கண்ணகி இருவரும் இணைந்து நடத்திய இல்லறநிகழ்வுகள் இதில் கூறப்படுகிறது. சில ஆண்டுகள் இன்பமாகக் கழிகிறது. அவர்களது பெற்றோர் அவ்விருவரையும் தனியாக ஒரு மனையில் குடியமர்த்துகின்றனர். கோவலன், கண்ணகியோடு மகிழ்ச்சியாக வாழ்கிறான். அவள் அழகைப் புகழ்ந்தும் மகிழ்கின்றான். பெற்றோருடன் சேர்ந்து வாழ்ந்த கூட்டுக்குடும்ப நிலையையும், பின் தனிக் குடும்பமாக வாழ்கின்ற நிலையையும் இக்காதை எடுத்துக் காட்டுகிறது.

3. அரங்கேற்று காதை :-

கணிகையர் குலத்தைச் சேர்ந்தவள் மாதவி. அவள் ஒரு ஆடல்மகள். சோழநாட்டு மன்னன் முன்னால் நடனமாடி, அரசனின் பச்சைமாலையையும், 'தலைக்கோல்' என்ற பட்டத்தையும் பெறுகின்றாள். மாதவியின் மாலையை ஆயிரம் பொற்கழஞ்சுக்கு வாங்கியதோடு, அவள் அழகில் மயங்கி அவள் இல்லத்திற்கே சென்று விடுகின்றான். இதில், இசை, நாட்டியம், நத்து, பதினொரு வகையான ஆடல்கள், நாடக மேடையின் அமைப்பு, பண்கள், யாழ் பற்றிய பல்வேறு செய்திகள் கூறப்படுகின்றன.

Scanned by CamScanner

4. அந்திமாலை சிறப்புசெய் காதை :-

இன்பத்தில் சேர்ந்து வாழும் கணவன், மனைவியர் மாலையில் மகிழ்வாகக் கூடி வாழ்வதும், பிரிந்தோர் வேதனைப்படுவதும் உலக இயல்பு. கோவலனோடு கூடியிருந்த மாதவி இன்பத்தையும், கணவனைப் பிரிந்த கண்ணகி துன்பத்தையுமாக இருவேறு மனநிலையை அனுபவிக்கின்றனர். வானில் தோன்றும் அரசனது வெண்கொற்றக் குடையும், முறையே நிலவும்கூட இப்படி இன்பத்தையும், துன்பத்தையும் வழங்குவதாயிற்று. மாலையின் மலரும் அனலியும், நிலவும் இப்படி கண்ணகிக்கும், மாதவிக்கும் வேறு வேறு உணர்வுகளைத் தந்தது.

5. இந்திர விழவு ஊர் எடுத்த காதை :-

இதில் புகார் நகர மக்கள் இந்திரனுக்கு விழா எடுக்கின்றனர். புகார் நகரம் மருவூர் பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இருபெரும் பகுதிகளை உடையது. தெய்வம், இலஞ்சி, ஒளிக்கல், பூதசதுக்கம், பாவை என்ற 5 வகை மன்றங்களும், அதற்கு மக்கள் செய்யும் பூசைகளும், பலிகளும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வழிபாடுகள், விழாக்கள் எங்கும் நடைபெறுகின்றன. விழாவில் மணம் நடைபெற்ற கணவனோடு, மனைவிமார்கள் உலவுகின்றனர். சிவந்த செங்கழுநீர் போன்ற கண்ணகியின் நீர் சொரியும் கருங்கண்ணும், மாதவியின் உள்ளத்தில் மறைந்தாலும் செங்கண்ணும் தம் உணர்வுகளை நீரை உகுத்தன. இன்பக் கண்ணீரையும், துன்பக் கண்ணீரையும் மாதவியும் கண்ணகியும் ஒருசேர உகுத்தனர்.

6. கடலாடு காதை :-

விஞ்சையன் ஒருவன் தன் மனைவியுடன் இந்திரவிழாக் காண புகார் வருகின்றான். அவன் மாதவியின் ஆடல்களைத் தன் மனைவிக்குக் காட்டி மகிழ்கின்றான். விழாவின் முடிவில் கோவலன்

Scanned by CamScanner

மாதவியுடன் உலாவினான். மாதவி நடனமாட அரங்கு, இருவரும் நீராடச் செல்கின்றனர். புகார் நகர மக்களோடு மக்களாக இருவரும் கலந்து, மகிழ்ச்சியாக இருந்தனர்.

7. <u>கானல்வரி</u>:-

கோவலன் யாழினை மீட்டி காவிரித்தாயைப் புகழ்ந்து பாடுகின்றான். மாதவியும் யாழினை மீட்டிப் பாடுகின்றாள். மாதவியின் பாடலுக்குத் தவறாக அர்த்தம் கற்பித்துக் கொண்ட கோவலன் மனம் மாற, ஊடுகின்றான். அவளுடன் கோர்த்திருந்த தன் கையை விலக்கிய கோவலன், 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்றபடி மாதவியைப் பிரிந்து தனியாகச் செல்கின்றான். கையற்ற நெஞ்சம் கொண்ட மாதவி, கோவலன் இல்லாமலேயே தன் மனையைச் சென்று சேருகின்றாள். கானல்வரி முடிந்தவுடன் மன்னனைப் பாடும் மரபும் அக்காலத்தில் இருந்தது என்பதை இதன் மூலம் அறியலாம்.

8. <u>வேனிற்காதை</u>:-

இளவேனிற்காலம் வந்தது. மாதவி தன் தோழி வசந்தமாலையை கோவலனிடம் தூதாக அனுப்புகிறாள். அவன் அதை மறுக்கின்றான். என்னிடம் பிரியமான அன்பு இருப்பது போன்று நடித்த மாதவியின் நாடகம் எல்லாம் அவள் தகுதிக்குப் பொருத்தமானதே என்று கூறி கோவலன் மாதவியிடம் வர மறுக்கின்றான். இளவேனில் வரும்முன் தன்னைப் பிரிந்து சென்றவன், இக்காலம் வந்தவுடன் வருவானோ? என்று எண்ணிய மாதவியின் எண்ணம் நிறைவேறவில்லை. இளவேனில் கோவலனுக்கு கண்ணகியின் நினைவைத் தூண்டியது.

9. கனாத்திறம் உரைத்த காதை :-

கண்ணகி தன் தோழி தேவந்தியிடம் தான் கண்ட தீயகனவு பற்றி எடுத்துரைக்கின்றாள். நேற்று இரவு என் கனவிலே வந்த கோவலன், என்னை ஒரு பெருநகரத்திற்கு இட்டுச் சென்றான். அங்கு அவனுக்கு தீங்கு நேர்ந்தது என்ற வார்த்தையை சிலர் கூறினர். நான் மன்னன் முன் சென்று வழக்குரைத்தேன். அப்போது, அம் மன்னனுக்கும், அவ்வூருக்கும் தீங்கு நேர்ந்தது என்று தன் கனவைப்பற்றிக் கூறினாள். அவள் கனவில் கண்டபோல், கோவலன் வந்து, தன் செல்வம் எல்லாம் தொலைந்து போனது என்றும், இந்நிலையை எண்ணி தான் வெட்கம் அடைவதாகவும் கூறுகிறான். கண்ணகி 'சிலம்பு உள கொண்மின்' என்கிறாள். இருவரும் விடியும்முன் புகாரை விட்டு, வெளியேறி மதுரை மாநகரம் செல்கின்றனர்.

10. நாடுகாண் காதை :-

கண்ணகி, கோவலன் இருவரும் சமணத் துறவி கவுந்தியடிகள் என்பவரோடு மதுரையை நோக்கி நடந்து செல்கின்றனர். திருவரங்கத்தைக் கடந்து சோணாட்டு உறையூர்வரை செல்லும் அவர்கள் பல்வேறு பாதைகளைக் கடந்து செல்கின்றனர். வழிநெடுக வசிக்கும் மக்களின் வாழ்க்கைநிலையை இப்பகுதி விரிவாக எடுத்துரைக்கிறது.

வினாக்கள் :-

1. கோவலன் கண்ணகியின் அழகை எவ்வாறு வருணிக்கிறான்?
2. மருவூர்பாக்கம் - பட்டினப்பாக்கம் பற்றி விவரி.
3. ஐவகை மன்றங்களில் நடைபெறும் வழிபாட்டினை விவரி?
4. தேவந்தி கதையை விளக்கு.
5. கண்ணகி கண்ட கனவை விளக்கு
6. அந்திமாலை யாருக்கு இன்பத்தையும், துன்பத்தையும் தந்தது? விளக்கு
7. மதுரை செல்லும் வழியில் கண்ணகி, கோவலன் கண்ட காட்சிகளை விளக்கு.

Scanned by CamScanner

## 2. மணிமேகலை – பாத்திரமரபு கூறிய காதை



மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.

ஆசிரியர் – சீத்தலைச் சாத்தனார்

சிலம்பு இல்லறத்தையும், மேகலை துறவறத்தையும் உணர்த்துவதால் இரட்டைக் காப்பியங்கள் என்றழைக்கப்படுகிறது.

கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை. மாதவியால் பௌத்தமதத் துறவியாக வளர்க்கப்படுகிறாள் மேகலை. மணிமேகலா தெய்வத்தின் அருளால், மணிபல்லவத்தில் 'அமுதசுரபி' என்ற பிச்சைப் பாத்திரத்தைப் பெற்று பசித்தவர்க்கு உணவு தந்து, அறவணஅடிகளின் உபதேசம் பெற்று [illegible] புத்தமதத் துறவியாகிறாள்.

அமுதசுரபி பாத்திரம் பெற்ற பின் அறவணஅடிகள் மணிமேகலைக்கு அப்பாத்திரத்தின் வரலாற்றை எடுத்துரைக்கிறார்.

**அறவணஅடிகள் மணிமேகலைக்குச் சொன்னது:-**

மதுரை அம்பலப்பீடிகையில் உறங்கும் ஆபுத்திரனிடம் வழிப்போக்கர் பயணத்தின் களைப்புற்றனர். பசியால் வாடி உணவு கேட்கின்றனர். அவன் சிந்தாதேவியை வேண்ட, அத்தெய்வம் தன் கையில் இருந்த ஒரு பாத்திரத்தை ஆபுத்திரனிடம் தந்து, நாடு வறுமை உற்றாலும் இது உணவு சுரக்கும் தன்மையது என்று கூறி, தந்தது. பாத்திரம் பெற்ற ஆபுத்திரன் தெய்வத்தை வணங்குகிறான். தன்னை நாடி வருவோர்க்கு உணவு தந்து, வாங்குவோர் கை வருந்தும் அளவு உணவு நல்குகிறான்.

**இந்திரன் வருகை:-**

வானுலகத்திலிருக்கும் தேவர்களின் தலைவனான இந்திரன் முதிய அந்தணர் உருவத்தில் தடியூன்றியவாறு ஆபுத்திரன் முன் தோன்றுகின்றான். நீ செய்த தானத்திற்கு பயனாக உனக்கு என்ன வேண்டுமோ, கேள் தருகிறேன் என்கிறான்.

Scanned by CamScanner

## ஆபுத்திரன் இந்திரனை எள்ளி நகையாடுதல் :-

ஆபுத்திரன் இந்திரனைப் பார்த்து நகைத்து, இங்கு நல்வினை செய்தவர்கள் உன் உலகின் இன்பத்தை நுகர்வோர்கள். தேவர்கள் அப்படிப்பட்டவர்களே. அவர்கள் பற்றினை அறுத்து, இங்குள்ளோர்க்கு உதவுவார்களா? இப்படிப்பட்டவர்களுக்கு தலைவன் நீ. அனைவரின் பசியை ஆற்றும் அமுதசுரபி என்னிடம் இருக்க நீ என்ன தருவாய்? உணவா? உடையா? பெண்களா? என்று கேட்டு இகழ்ந்தான்.

## இந்திரன் சாபம் :-

ஆபுத்திரன் தரும் உணவை வாங்க ஆளில்லாமல், இந்நாடே பல வளங்கள் பெற்று, பிச்சை வாங்குவோர் இல்லாத நாடாக இந்நாடு ஆகட்டும் எனக்கூறி இந்திரன் ஆபுத்திரனுக்கு சாபமிட்டான்.

ஆபுத்திரன் உணவு வாங்குவோர் இல்லாததால், சாவகத்தீவிற்குச் சென்றான். மணிபல்லவத்தீவில் பாய்மரத்தை சரி செய்து கொண்டு இருக்கும்போது, கப்பல் அவனை விட்டுச் சென்றது. எனவே, ஆபுத்திரன் அமுதசுரபியை கோமுகிநதியில் விட்டுவிட்டு, ஆண்டுக்கு ஒருமுறை தோன்றும் இப்பாத்திரம் உயிர்களைக் காப்போர் கையிற்குச் செல்ல வேண்டும் என்று கூறி, வடக்கிருந்து உயிர் நீத்தான்.

## ஆபுத்திரன் மறுபிறப்பு :-

இவ்வாறு ஆபுத்திரன் கதையை மணிமேகலையிடம் கூறிய அடிகள், உண்ணாநோன்பு இருந்து உயிர்விட்ட ஆபுத்திரன் சாவகத்தீவின் அரசனது பசுவாகப் பிறக்கின்றான்.

Scanned by CamScanner

ாதிரி வினாக்கள் !-

ஆபுத்திரனுக்கு இந்திரன் இட்ட சாபம் யாது? விளக்கு.

ஆபுத்திரன் அமுதசுரபியை யாரிடமிருந்து எப்படி பெற்றான்? விளக்கு.

—×—

Scanned by CamScanner